©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2013-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 4.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 21] CHENNAI, WEDNESDAY, JUNE 4, 2014
Vaikasi 21, Jaya, Thiruvalluvar Aandu – 2045

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

CONTENTS

| | Pages. |
|---|---|
| TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI | |
| Amendments to Fees and Fines Regulations 2004 .. | 338-345 |
| GOVERNMENT EXAMINATIONS / EDUCATIONAL OFFICERS | |
| Loss of Certificates .. .. .. .. .. | 346-348 |

TABLE

(a) xxx

(b) Annual Licence Fees:

(i) xxx

(ii) Distribution: 0.02 paise per unit of electricity proposed to be sold during the year subject to a minimum of Rs.20 lakhs and a maximum of Rs. 2 crores.

(iii) xxx

(c) xxx

(d) xxx

(e) xxx

TABLE

(a) xxx

(b) Annual Licence Fees:

(i) xxx - No change

(ii) Distribution: 0.02 paise per unit of electricity proposed to be sold during the year subject to a maximum of Rs. 2 cores.

(iii), (c), (d), (e) } No change

(By order of the Tamil Nadu Electricity Regulatory Commission)

S. GUNASEKARAN,
*Secretary,*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

## தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## கட்டணம் மற்றும் அபராதங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள் 2004

*(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/ F & F / 4/2–8 நாள் 13–5–2014.)*

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181 – ஆம் பிரிவுடன் சேர்த்து படிக்கப்படும் 86 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (g) கூறின்படி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துபிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ் நாடு ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒழுங்குமுறை மின்சார ஆணைய கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிமுறைகளுக்கு பின்வரும் திருத்தங்களை குறித்துரைத்துள்ளது இத்திருத்தத்தின் வரைவானது மேற்சொன்ன 181 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

### திருத்தங்கள்

மேற்சொன்ன விதிமுறைகளில்,–

(1) 6 ஆம் ஒழுங்குமுறை விதியின் கீழுள்ள அட்டவணையில்,–

(i) 2 ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்கு பதிலாக பின்வரும் இனம் மற்றும் பதிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"2. மின் செலுத்துதற்கான மின் கட்டண வீதம் நிர்ணயம் செய்தல் — அதிகபட்சமாக ரூபாய் 25 லட்சம் என்ற வரம்புக்குட்பட்டு இருந்துவரும் உரிமம்தாரர்களை பொருத்தமட்டில் முந்தைய ஆண்டின் வருவாய் வரவுகளில் அல்லது புதிய உரிமம்தாரரை பொறுத்தவரை எந்த வருடத்திற்கான மின் கட்டணத்தை ஆணையம் நிர்ணயிக்க வேண்டுமோ அந்த ஆண்டின் எதிர்பார்க்கப்படும் வருவாய் வரவுகளில் 0.02 சதவீதமாக இருக்கும்." ;

(ii) 3 ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்கு பதிலாக, பின்வரும் இனம் மற்றும் பதிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

"3. மேலே 1 மற்றும் 2 ம் இனங்களில் கூறப்பட்டுள்ள மின் கட்டண நிர்ணய ஆணைகள் மறு ஆய்வு செய்தல் –

| | |
|---|---|
| (அ) மனுவானது மின் கட்டண நிர்ணயம் செய்ய மனு தாக்கல் செய்த மனுதாரர்கள் தாக்கல் செய்யும்விடத்து | மின் கட்டண நிர்ணயம் செய்ய தாக்கல் செய்யப் பட்ட மனுவிற்கு செலுத்திய தொகையில் 5 சதவீதம் |
| (ஆ) மனுவானது கழகங்கள் அல்லது குழுமங்களால் தாக்கல் செய்யுமிடத்து | ரூ.15000/– |
| (இ) மனுவானது தனிப்பட்ட நுகர்வோர் ஒருவரால் தாக்கல் செய்யுமிடத்து" | ரூ.1000/– " ; |

(iii) 7 ம் இனத்தில் பிறபட்டியலிடப்பட்ட வகைகளில் உள்ளடக்கப்படாத கழகங்கள் அல்லது குழுமங்களால் தாக்கல் செய்யப்படும் "பல்வகை மனுக்கள்" என்ற தலைப்பின் கீழ் வரும் (அ) உப இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்கு பதிலாக பின்வருவன அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

| | |
|---|---|
| " (அ) நுகர்வோர்கள் அல்லது மின் உற்பத்தியாளர்களின் பதிவுசெய்யப்பட்ட கழகங்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை மனுக்கள்" | ரூ.2,00,000/– " |

(iv) 8 ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பதிலாக பின்வரும் இனம் மற்றும் பதிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"8. மறு ஆய்விற்கான கட்டணங்கள்

| | |
|---|---|
| (i) ஆணையத்தின் ஆணையில் தட்டச்சு பிழையோ, எழுத்து பிழையோ மாற்றம் செய்யப்படுவதற்காக | கட்டணம் இல்லை |
| (ii) பல்வகை மனுவில் ஆணையத்தால் வழங்கப்பட்ட ஆணையை மறு ஆய்வு செய்ய தனி நபர் எவராகிலும் தாக்கல் செய்யயும் மறு ஆய்வு மனு | ரூ. 200/– |
| (iii) கீழே காணப்படும் உப இனம் (iv) ல் குறித்துரைக் கப்பட்டுள்ள இனங்களைத் தவிர்த்து 1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் (மத்தியச் சட்டம் 1/1956) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களோ அல்லது வேறு ஏதாவது நிறுவனம் அல்லது பிற கூட்டமைப்பினால் பல்வகை மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மறு ஆய்வு மனு | ரூ. 3000/– |
| (iv) பல்வகை மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிராக, நுகர்வோரின் அல்லது மின் உற்பத்தியாளர்களின் பதிவு செய்யப்பட்ட கழகங்களால் தாக்கல் செய்யப்படும் மறு ஆய்வு மனு | ரூ. 20000/– |
| (v) உரிமம்தாரர்களுக்கும் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கிடையேயான பூசல்களைத் தீர்க்கும் மனுவின் மீது (DRP) வழங்கப்பட்ட ஆணையை மறுஆய்வு செய்ய | பூசல்களை தீர்க்கும் (DRP) மனுவிற்கு செலுத்தப்பட்ட தொகையில் 10 சதவீதம் |

(2) 9 ஆம் ஒழுங்குமுறை விதியில், அட்டவணையில், "(b) ஆண்டு உரிமக்கட்டணங்கள்" என்ற தலைப்பின் கீழ், (i) ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பதிலாக பின்வரும் இனம் மற்றும் பதிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

| | |
|---|---|
| " (i) மின் பகிர்மாணம் : | ரூபாய் 2 கோடி என்ற வரம்பிற்குட்பட்டு, அந்த வருடத்தில் விற்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரம் யூனிட் ஒன்றிற்கு 0.02 பைசா". |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

S. GUNASEKARAN,
*செயலாளர்*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்."*

## விளக்கவுரை

பிற மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களில் தற்சமயம் நடைமுறையில் இருந்துவரும் கட்டண விகிதங்களைக் கருத்தில் கொண்டு, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறை விதிகளை தக்கவாறு திருத்த ஆணையம் முடிவு செய்து இத்திருத்தங்கள் மேற்சொன்ன ஆணையத்தின் கருத்துருவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

### இருந்துவரும் வகைமுறையையும் திருத்தப்பட்ட வகைமுறையையும் தெரிவிக்கும் விவர அறிவிக்கை

| *வ. எண்*<br>*(1)* | *இருந்துவரும் வகைமுறை*<br>*(2)* | *திருத்தப்பட்ட வகைமுறை*<br>*(3)* |
|---|---|---|
| 1. | 6. <u>மின்சக்தி வழங்குளை ஒப்பந்தம் மற்றும் பல்வகை மனுக்கள் உள்ளிட்ட மின் கட்டண மனுக்களுக்கான கட்டணங்கள்:–</u><br>(அ) மின் கட்டமைப்பு பெருமளவு அல்லது சில்லரை மின்சக்தி ஆகியவற்றிற்கு,<br>(ஆ) மின்செலுத்துகை, மின் கட்டணம் மற்றும் அத்தகைய மின் கட்டணங்களை மறு ஆய்வு செய்வதற்கு,<br>(இ) மின்சக்தி வாங்கும் அல்லது கொள்முதல் செய்முறைகளுக்கான ஒப்புதலுக்கான மனு மற்றும்<br>(ஈ) பல்வகைகளுக்கான கட்டண வீதங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது:–<br><u>அட்டவணை</u><br>1. xxx xx xxx<br>2. மின் செலுத்துதற்கான கட்டணவிதம் நிர்ணயம் செய்தல் — ரூபாய் ஒரு லட்சம் | 6. <u>மின்சக்தி வழங்குளை ஒப்பந்தம் மற்றும் பல்வகை மனுக்கள் உள்ளிட்ட மின் கட்டண மனுக்களுக்கான கட்டணங்கள்:–</u><br>(அ) மின் கட்டமைப்பு பெருமளவு அல்லது சில்லரை மின்சக்தி ஆகியவற்றிற்கு,<br>(ஆ) மின்செலுத்துகை, மின் கட்டணம் மற்றும் அத்தகைய மின் கட்டணங்களை மறு ஆய்வு செய்வதற்கு,<br>(இ) மின்சக்தி வாங்கும் அல்லது கொள்முதல் செய்முறைகளுக்கான ஒப்புதலுக்கான மனு மற்றும்<br>(ஈ) gŠtiffS ;fhd fFlz Åj§fŸ Ñœ;fhணும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது:–<br><u>அட்டவணை</u><br>1. xxx xxx xxx<br>2. மின் செலுத்துதற்கான கட்டண வீதம் நிர்ணயம் செய்தல் — அதிகபட்ச ரூபாய் 25 லட்சம் என்ற வரம்பிற்குட்பட்டு, இருந்துவரும் உரிமம்தாரர்களை பொறுத்த மட்டில் முந்தைய ஆண்டின் வருவாய் வரவுகளில் அல்லது புதிய உரிமம்தாரரை பொறுத்தவரை எந்த வருடத்திற்காக மின் கட்டணத்தை ஆணையம் நிர்ணயிக்க வேண்டுமோ அந்த ஆண்டின் எதிர்பார்க்கப்படும் வருவாய் வரவுகளில் 0.02 சதவீதமாக இருக்கும். |
| 2. | 3. மேலே (1) மற்றும் 2 எண்களில் கூறப்பட்ட மின் கட்டண ஆணையின் மறு ஆய்வு–<br>(அ) முதலில் மனுசெய்த மின் கட்டண மனுதாரர்களாலேயே முறையீடு செய்யப்படும்போது — ரூ. 25,000/–<br>(ஆ) ஒரு கழகத்தினால் / பிரிவினரால் முறையீடு செய்யப்படும்போது — ரூ. 15,000/– | 3. மேலே 1 மற்றும் 2–ம் இனங்களில் கூறப்பட்டுள்ள மின் கட்டண நிர்ணய ஆணைகளை மறு ஆய்வு செய்தல்–<br>(அ) மனுவானது மின் கட்டணத்தை நிர்ணயம் செய்த நபர்களால் தாக்கல் செய்யும்விடத்து — மின் கட்டணம் நிர்ணயம் செய்ய தாக்கல் செய்த மனுவிற்கு செலுத்திய தொகையில் 5 சதவீதம்<br>(ஆ) மனுவானது கூட்டமைப்பு அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களை உள்ளடக்கிய குழுவினால் தாக்கல் செய்யுமிடத்து — ரூ. 15,000/– |

| வ. எண் (1) | இருந்துவரும் வகைமுறை (2) | | திருத்தப்பட்ட வகைமுறை (3) | |
|---|---|---|---|---|
| | (இ) ஒரு தனிப்பட்ட நுகர்வோரால் முறையீடு செய்யப்படுகிறபோது | ரூ.1000/– | (இ) மனுவானது தனிப்பட்ட நபர் ஒருவரால் தாக்கல் செய்யுமிடத்து | ரூ. 1,000/– |
| 3A | xxx | | 3A | மாற்றம் ஏதுமில்லை |
| 4 | xxx | | 4 | |
| 5 | xxx | | 5 | |
| 6 | xxx | | 6 | |
| 7. | பிறபட்டியலிடப்பட்ட வகைகளில் உள்ளடக்கப் படாத கழகங்கள் அல்லது குழுமங்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை மனுக்கள்:– | ரூ.1,00,000/– | 7. பிறபட்டியலிடப்பட்ட வகைகளில் உள்ளடக்கப்படாத கழகங்கள் அல்லது குழுமங்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை மனுக்கள்:– | |
| | (அ) நுகர்வோரின் அல்லது மின் உற்பத்தியாளர்களின் பதிவு செய்யப்பட்ட கழகங்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை மனுக்கள் | | (அ) நுகர்வோரின் அல்லது மின் உற்பத்தியாளர்களின் பதிவு செய்யப்பட்ட கழகங்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை மனுக்கள் | ரூ. 2,00,000/– |
| | (ஆ) xxx xx xxx | | (ஆ) xxx xx xxx | |
| 8. | தட்டச்சுப் பிழைகள் அல்லது எழுத்துப் பிழைகள் அல்லது தவறுகள் ஆகிய காரணங் களுக்காக ஆணையத்தின் ஆணைதெனின் மறு ஆய்வு அல்லது திருத்தம் | கட்டணம் இல்லை | (i) ஆணையத்தில் ஆணையில் தட்டச்சுப் பிழையோ எழுத்துப் பிழையோ மாற்றம் செய்யப்படுவதற்கான | கட்டணம் ஏதுமில்லை |
| | | | (ii) பல்வகை மனுவில் ஆணையத்தால் வழங்கப்பட்ட ஆணையை மறு ஆய்வு செய்ய நபர் எவராகிலும் தாக்கல் செய்யப்படும் மறு ஆய்வு மனு. | ரூ.200/– |
| | | | (iii) கீழே காணப்படும் உப இனம் (iv)-ல் குறித்துரைக்கப்பட்டுள்ள இனங்களைத் தவிர்த்து, 1956–ம் ஆண்டு நிறுவனச் சட்டம் (மத்தியச் சட்டம் I / 1956–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களோ அல்லது வேறு ஏதாவது நிறுவனம் அல்லது பிற கூட்டமைப்பினால் தொடரப்பட்ட பல்வகை மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மறு ஆய்வு மனு. | ரூ.3000/– |

| வ. எண்<br>(1) | இருந்துவரும் வகைமுறை<br>(2) | | திருத்தப்பட்ட வகைமுறை<br>(3) | |
|---|---|---|---|---|
| | | | (iv) பல்வகை மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கெதிராக நுகர்வோரின் அல்லது மின் உற்பத்தியாளர்களின் பதிவு செய்யப்பட்ட கழகங்களால் தாக்கல் செய்யப்படும் மறு ஆய்வு மனு. | ரூ. 20,000/– |
| | | | (v) உரிமம்தாரர்களுக்கும் மின் உற்பத்தி நிறுவனங்களுக்–கிடையேயான பூசல்களை தீர்க்கும் மனுவின் (DRP) மீது வழங்கப்பட்ட ஆணையை மறு ஆய்வு செய்ய | பூசல்களைத் தீர்க்கும் மனுவிற்கு (DRP) செலுத்தப்பட்ட தொகையில் 10 சதவீதம். |
| | 9. <u>உரிமக்கட்டணம்</u><br>(1) xxx xxx<br>(2) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் மின் உரிமம் வழங்குவதற்கான ஒழுங்குமுறை விதியின் கீழ் செலுத்த வேண்டிய உரிமக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. | | 9. <u>உரிமக்கட்டணம்</u><br>(1) xxx xxx<br>(2) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் மின் உரிமம் வழங்குவதற்கான ஒழுங்குமுறை விதியின் கீழ் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. | |
| | <u>அட்டவணை</u> | | <u>அட்டவணை</u> | |
| | (அ) xxx xxxx xxx | xxx xxx | (அ) xxx xxx | xxx xxx |
| | (ஆ) <u>ஆண்டு உரிமக்கட்டணங்கள்</u> | | (ஆ) <u>ஆண்டு உரிமக்கட்டணம்</u> | |
| | (i) xxx | xxx | (i) xxx | xxx |
| | (ii) மின் பகிர்மானம் : | குறைந்த பட்சம் ரூபாய் 20 லட்சம் மற்றும் அதிக பட்சம் ரூபாய் 2 கோடிக்கு உட்பட்டு இந்த ஆண்டின் போது விற்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மின்சாரம் யூனிட் ஒன்றுக்கு 0.02 காசு | (ii) மின் பகிர்மானம் : | ரூபாய் 2 கோடி என்ற வரம்பிற்குட்பட்டு, அந்த வருடத்தில் விற்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரம் யூனிட் ஒன்றிற்கு 0.02 பைசா |
| | (iii) xxxx | | (iii) xxxx | |
| | (c) xxxx | | (c) xxxx | |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

S. GUNASEKARAN,
*செயலாளர்*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*